2 பக்கங்கள் 15 காசுகள்

பதிவு எண் எம்:8798

தீக்கதிர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] நாளிதழ்

கதிர் 13 மதுரை 4 11 -75 செவ்வாய் மலர் 230

அமெரிக்ககம்பெனி முதலாளிகள் பிரதமரை சந்தித்தனர்

புதுடெல்லி, நவ. 1—

இந்தியாவில் உள்ள அமெரிக்க கம்பெனிகளின் வர்த்தகசபை பிரதிநிதிகள் பிரதமரை அக்டோபர் 29-ல் சந்தித்தனர். சந்தித்து மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர். இந்தியாவில் செயல்படும் அமெரிக்க கம்பெனி முதலாளிகளில் 90 சதவீதம்பேர் அவ்வர்த்தக சபையில் உள்ளனர்.

சொந்த நாட்டவனுக்கு அடையாளச் சீட்டு

ப்லோம்போன்டெய்ன் [தென்ஆப்ரிக்கா], அக். 29—

தென் ஆப்ரிக்காவின் சொந்தநாட்டு மக்களான கறுப்பர்கள், அந்நாட்டில் வெள்ளையர்கள் வாழும் பகுதிக்கு செல்ல அடையாள அட்டைகள் கொடுக்கப்படுமாம். இதுவரை அப்பகுதிக்கு கறுப்பர்கள் செல்ல முடியாதாம். இனிமேல் அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் செல்லலாமாம். இதனை அந்நாட்டை ஆளும் வெள்ளையர் அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.



தொழிலாளர் போராடி பெற்ற உரிமை, போனஸ்
அவசரச் சட்டத்தின் மூலம் அழித்தொழித்துவிட்டது மத்தியரசு
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ கண்டனம்

கல்கத்தா, நவ. 1—

போனஸ், தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமையாகும். ஆனால், புதிய போனஸ் அவசர சட்டத்தின் மூலம் மத்திய அரசு அந்த உரிமையை அழித்தொழித்து விட்டது. இச்சட்டத்தின் மூலம் பெருமுதலாளிகள் நினைத்துப்பாராத அனுகூலங்களை அவர்களுக்கு அளித்துள்ளது மத்திய அரசாங்கம் எனக் குறிப்பிட்டுள்ளது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு.

இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து ஆங்காங்கே எதிர்ப்பைக்காட்டிய தொழிலாளர்களைப் பாராட்டிய தலைமைக் குழு, மேலும் ஒற்றுமையுடன் எதிர்க்குமாறும் தொழிலாளி வர்க்கத்துக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

அக். 25முதல் 27வரை கல்கத்தாவில் கூடிய அரசியல் தலைமைக்குழு போனஸ் அவசரச் சட்டம் பற்றிய தனது தீர்மானத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளது. அதன் முழுவிபரம் வருமாறு;-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல்தலைமைக் குழு, போனஸ் அவசர சட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. அவசர நிலைக்குப் பின்னால் உள்ள உண்மையான நோக்கத்தை இந்த போனஸ் அவசரச்சட்டம். பளிச்செனவெளிப்படுத்துகிறது. கொடுமையான நடவடிக்கை மூலம் தொழிலாளி வர்க்க இயக்கத்தை திணற அடிக்கச் செய்யவே இந்த போனஸ் அவசரச்சட்டம் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் ஊழியர்கள் மீதும், பொது மக்கள் மீதும் நெருக்கடியின் சுமைகளை சுமத்துவதற்கு ஆளும் வர்க்கமும் அரசாங்கமும் முயற்சிக்கின்றன. இம்முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் அதிகரிகின்றன. இந்த எதிர்ப்புகளை தடுக்கவே இந்நடவடிக்கை.

தொழிலாளர்களின் மொத்த வருட வருமானத்தில் 8 33 சதவீத குறைந்தபட்ச போனஸ் என்பது, தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமையாகும், அது கொடுபடாத கூலியாகும், அந்த உரிமையானது இந்த போனஸ் அவசரச் சட்டத்தால் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டது. குறைந்தபட்ச போனஸ் 4 சதவீதமாக குறைக்கப் பட்டது என்பது மட்டுமல்லாமல், நட்டக்கணக்கு காட்டும்கம்பெனிகள் எவ்வித போனசும் தரவேண்டியதில்லை என்று உத்திரவிட்டுள்ளது. கம்பெனிகள் வரவு செலவுக்கணக்குகளில் மோசடித்தனம் செய்யப்படும் என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள்- நட்டக்கணக்கு காட்டும் கம்பெனிகள் போனசே தரவேண்டியதில்லை என்ற உத்திரவின் அர்த்தம் தொழிலாளர்களில் பெரும் பகுதியினருக்குபோனஸே இல்லை என்பதாகும்.

இரண்டாவதாக, போனஸ் சட்டப்படியான போனசுக்கும் அதிகமான தொகையை இனமாகக்கூட கொடுக்கவிடாமல்போனஸ் அவசர சட்டத்தால்முதலாளிகள் தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு, பேரத்தின்மூலம் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் அதிக போனஸ் பெறுவதற்குரிய கூட்டுப் பேரமுறை தடுக்கப் பட்டுள்ளது.

முதலாளிகளுக்கு அனுகூலம்

எல்லாவற்றிற்கும் மேலாக 1974-ம் ஆண்டு தொழிலாளர்கள் பெற்ற போனஸ், சட்டத்திற்கு மேலாக தொழிலாளிகள் அதிக போனஸ் பெற்றிருந்தால், அதனை 3 வருடகாலத்தில் முதலாளிகள் திரும்பப் பெறுவதற்கும் போனஸ் அவசர சட்டம் வழிவகை செய்துள்ளது,

மேலும், ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட நீண்டகால ஒப்பந்தம், போனஸ் அவசரசட்ட வசதிகளுக்கு முரணாக இருக்குமானால், அவ்வொப்பந்தம் செல்லாது என போனஸ் அவசரசட்டம் அறிவித்துள்ளது.

இவ்வாறு, புதிய போனஸ் அவசரசட்டம் தொழிலாளி வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுக்கிறது. அதேசமயத்தில் பெருமுதலாளிகள் கனவிலும் நினைத்துப்பார்த்திராத அனுகூலங்களை அவர்களுக்கு கொடுத்துள்ளது. போனஸ் சட்டத்தை திருத்துவதற்காக அமைக்கப்பட்ட போனஸ் கமிஷனில் இருந்த முதலாளிகளின் பிரதிநிதிகள்கூட, அவர்களுக்கு இவ்வளவு அனுகூலங்களைத் தரக்கூடிய சிபாரிசுகளை செய்யவில்லை. அரசாங்கத்தை ஆதரிக்கும் ஐ என் டி யூ சி, ஏ ஐ டி யூ சி தொழிற் சங்கங்கள்கூட இந்த போனஸ் அவசரச்சட்டத்திற்கு எதிராக கண்டனம் தெரிவித்துள்ளன.

தொழிலாளர்களுக்கு அறைகூவல்

ஆனாலும், அவசர நிலை இருந்தபோதிலும், தொழிற் சங்க உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் அடக்கப்பட்டபோதிலும் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் ஒற்றுமையாக போனஸ் அவசரச் சட்டத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். பல்வேறுமுறைகளில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். என்பதையும் அரசியல் தலைமைக் குழு கவனத்தில் கொள்கிறது. அரசியல் தலைமைக்குழு அவர்களை வாழ்த்துகிறது. மேலும், தங்களுடையஒற்றுமையை கட்டுமாறும் தங்களுடைய ஒன்றுபட்ட எதிர்ப்பை தீவிரப்படுத்துமாறும் தொழிலாளர்களுக்கு அரசியல் தலைமைக்குழு அறை கூவல் விடுகிறது

பலபத்தாண்டுகளாக போராடிப்பெற்ற உரிமைகளின் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. அத்தாக்குதலுக்கு எதிராக தொழிலாளிவர்க்கத்தையும் ஊழியர்களையும் பரந்த அளவில் திரட்டவேண்டும். எனவே, வெறும் வார்த்தை எதிர்ப்புகளோடு நின்றுவிடாமல் தொழிலாளர்களை திரட்டும் முயற்சியில் ஏனைய தொழிற்சங்கங்களோடு கைகோர்க்குமாறு ஏ ஐ டி யூ சி, ஐ என் டி யூ சி தலைமைகளுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியின் அரசியல் தலைமைக்குழு அழைப்பு விடுகிறது.

சம வேலைக்கு சம ஊதியம்
வ. கம்யூனிஸ்டுகளின் நிலைக்கு பாப்பாஉமாநாத் கண்டனம்

திருச்சி, அக். 31—

சமவேலைக்கு சமஊதியம் என்று அவசரச்சட்டம் போடப்பட்ட பின்பும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெற்வேறான சம்பளத்தை நிர்ணயித்து நிலப்பிரபுக்களின் கையாட்களாக வலது கம்யூனிஸ்டுகளின் தலைமையிலுள்ள விவசாய சங்கம் செயல்படுவதை தமிழக ஜனநாயக மாதர் சங்கத்தின்பொதுச் செயலாளர் பாப்பாஉமாநாத் கண்டித்துள்ளார்.

அவர் தன்னுடைய அறிக்கையில் கூறியிருப்பதாவது;—

சமவேலைக்கு சமஊதியம் வழங்கிடும் அவசர சட்டம் ஒன்று சமீபத்தில் வெளிவந்துள்ளது. ஐ எல் ஒ எனப்படும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் 1951ல் வரையறுத்த இந்த விதியை (அதாவது சமவேலைக்கு சமஊதியம் தரவேண்டும் என்பது) இந்திய அரசு 1958ல்தான் ஏற்றுக்கொண்டது.

'அக்குவேறு ஆணிவேறாக அலசு அலசு என்று அலசி' 18 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில்தான் அவசரச் சட்டத்தை பிறப்பித்துள்ளது. நாம் பேசாமல் இருந்தால் இந்த சட்டமும் விட்டத்தில் சொருகப்பட்டு விடும்.

எனவேதான், நமது மாதர் சங்கம் இந்த சட்டத்தை சகல துறைகளிலும் கருராக அமுலாக்கக் கோரும் லட்சம் மாதர்களது கையெழுத்து இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மேலும் இதனை விவசாயத் துறையில் அமுலாக்கிடும் முறையில் பரிந்துரை வழங்க வேண்டுமென தமிழக விவசாயத் தொழிலாளர்கள் கூலி நிர்ணயக் குழுவிடம் மாவட்டம்தோறும் நமது மாதர் சங்க தூதுக் குழுவினர் மனுக்களை கொடுக்கிறார்கள்.

இந்நிலையில், வலது கம்யூனிஸ்டுகளின் தலைமையில் உள்ள தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் பழைய முறையிலேயே ஆணுக்கு உயர்ந்த கூலியும், பெண்ணுக்கு குறைந்த கூலியும் கோரியிருப்பதை நான் கூறும்போது பலருக்கும் வியப்பாகத்தான் இருக்கும்.

ஆனால் இது உண்மையே! சமீபத்தில் அவர்களது விவசாயிகள் சங்கம் கூடிய போது,

நன்செய் பகுதியில்
ஆணுக்கு ரூ 8ம்
பெண்ணுக்கு ரூ 6ம்
புன்செய் பகுதியில்
ஆணுக்கு ரூ 6ம்
பெண்ணுக்கு ரூ 4ம்

என கூலி கோரிக்கை வைத்துள்ளது.

ஜனநாயக இயக்கத்தில் காங்கிரஸ் கட்சியின் தொங்கு சதையாகவும், தொழிலாளர் இயக்கத்தில் பெருமுதலாளிகளின் எடுபிடிகளாகவும் வலது கம்யூனிஸ்டுகள் செயல்படுவதை அறிவோம். ஆனால் இன்று நிலப்பிரபுக்களது கையாட்களாக நின்று பெண்களுக்கு அநீதி இழைப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

வலது கம்யூனிஸ்டுக்கு செங்கொடி ஏன்?
காங்கிரசார் கூறுகிறார்கள்

திருவனந்தபுரம், நவ. 1—

புன்னப்புரா—வயலார் தியாகிகளின் நினைவு வாரத்தையொட்டி கண்டலூர் என்ற இடத்தில் ஏற்றி இருந்த செங்கொடியை அண்மையில் ஒருநாள் இரவில் இளைஞர் காங்கிரஸ்காரர்கள் அக்கிரமமாக தீ வைத்து எரித்து விட்டனர்,

செங்கொடிக்கு தீவைக்கச் சென்றபோது, 'அது வலது கம்யூனிஸ்டுகள் ஏற்றிய கொடியா? அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகள் ஏற்றிய கொடியா என்ற சந்தேகம் அவர்களில் ஒரு சிலருக்கு ஏற்பட்டது.

'ஒரு வேளை அது வலது கம்யூனிஸ்டுகள் ஏற்றிய கொடியாக இருந்துவிட்டால்......அவர்கள் நம்முடன் அல்லவா கூட்டு சேர்ந்திருக்கிறார்கள்......' என்றும் அவர்கள் சற்று தயங்கினார்கள். ஆனால், அவர்களில் மற்ற சிலர் அதை எதிர்த்தனர்.

'இடதானாலும் வலதானாலும் அது செங்கொடிதானே? வலது கம்யூனிஸ்டுகளுக்கென்று தனியாக ஒரு கொடி எதற்கு?' என்றனர். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து செங்கொடிக்குத் தீ வைத்து அதைப் பொசுக்கினர்.

இந்த அக்கிரமக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி போலீசில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்கள் புகார் செய்துள்ளனர்.

புன்னப்புரா-வயலார் தியாகிகளின் லட்சியங்களை மனதிற் கொள்க!
— ஏ கே. கோபாலன்

வயலார், அக்.31—

இந்திய மக்கள் ஒரு காலத்திலும் மறக்க முடியாத போராட்ட சரித்திரத்தைப் படைத்த புன்னப்புரா-வயலார் ரத்த சாட்சிகளின் [தியாகிகளின்] லட்சியங்களை மனதிற்கொண்டு தியாகத்தை ஏற்க, இன்றைய தலைமுறையினர் முன்வரவேண்டும் என்றுதோழர் ஏ கே கோபாலன் வேண்டுகோள் விடுத்தார்.

மனித உணர்வை அறியாமல்—மனிதனின் தேவைகளை மதிக்காமல்— அடக்குமுறைகளை ஏவி விட்ட ஒரு விசேட சூழ்நிலையில் அன்றைய ஆட்சியாளர்களின் சோற்றுப் பட்டாளத்திற்கு எதிராகப் போராடிய புன்னப்புரா—வயலாரின் தீர மிக்க தியாகசீலர்களின் மனத் திண்மை இன்னும்மக்களின் பகைவர்களைநடுங்கச் செய்கிறது -என்றும்தோழர் ஏ கே ஜி முழங்கினர்.

கேரளத்தில் புன்னப்புரா—வயலார் போராட்ட தியாகிகளின் 29-வதுநினைவு வாரம் முடிந்ததையொட்டி வயலாரில் நடைபெற்ற மிகப்பெரிய பொதுக் கூட்டத்தில் தோழர் ஏ கே ஜி பேசினர்.

பொதுக்கூட்டத்திற்கு தோழர் கே ஆர் கௌரியம்மாள் தலைமை வகித்தார். 'தேசாபிமானி' நாளிதழின் தலைமை ஆசிரியர் பி கோவிந்தபிள்ளை, விவசாய சங்கத் தலைவர் ஏ வி குஞ்ஞாம்பு, சுசீலாகோபாலன், எம் என் குருப்,என் பி தண்டார் ஆகிய தோழர்களும் பேசினர். பி சாம்பசிவனின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.

கேரளம் முழுவதும் புன்னப்புரா—வயலார் தியாகிகளின் 29 வது ஆண்டு நினைவுவாரம்கடந்த 20ந் தேதி ஆரம்பித்து 27ந் தேதி வரை நடைபெற்றது.

27ந் தேதியன்று வயலாரில்தியாகிகளின்நினைவுச் சின்னத்தில் ஜோதி ஏற்றி வைக்கப்பட்டது. ஜோதியில் தோழர் ஏ கே கோபாலன் சுடர் ஏற்றிவைத்தார்.

கூடியிருந்த ஆயிரக்கணக்கான உழைப்பாளிகளும், தோழர்களும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி தியாகிகளின் உன்னத லட்சியங்களை நினைவு கூர்ந்தனர்,

கைதிகளை விஷமிட்டு வேதனையில் சாகடிக்கும்
கொடுமை
சிலி பாசிஸ்ட்டுகளின் மிருகத்தனம்

லண்டன், அக். 29—

சிலிநாட்டின் பாசிஸ சர்வாதிகாரக் கொடுங்கோலர்களது ஆட்சியில் ஏராளமான கைதிகள், விஷமருந்திட்டு கொல்லப்படும் கொடுமை நடக்கிறது அவ் விஷமருந்தை உடலில்ஏற்றுவதால், அது மெல்லமெல்ல. சாவிற்கு கொண்டு விடுகிறதாம்.

இவ்விபரத்தை லண்டனில் வெளியாகும் 'அப்ஸெர்வர்,என்னும் பத்திரிக்கை கூறியுள்ளது.

சிலிநாட்டுத் தலைநகரான சாண்டியாகோவின் செய்திவடிகட்டலையும் மீறி வந்த செய்திபின்படி, புற்று நோய் எதிர்ப்பு மருந்தான சைக்லோ பாஸ்பாமைட் என்னும் மருந்தை கைதிகளின் உடலில் மிதமிஞ்சிய அளவில் உடலில் ஏற்றுகின்றனர் என்று அப்பத்திரிகை உறுகிறது.

மேலும்சைக்லோபாஸ் பாமைட் என்னும் அம் மருந்தை உயரமான இடத்தில் வைத்துக் கொண்டு ட்யூப் மூலம் கைதியின் சவ்வுப் பைக்குள் ஏற்றுகின்றனர். அம்மருந்தை இப்படி மிருகத்தனமாக ஏற்றுவதால்தாங்கமுடியாத வேதனையை அம்மருந்து ஏற்படுத்துகிறது. ஒருவருடத்திற்குப் பிறகு, அளவுக்கு மிஞ்சிய முறையில் சைக்லோபாஸ் பானமட் ஏற்றப்படும் சவ்வுப் பை கருகிச் சுருங்கி விடுகிறது பின்பு அக்கைதி உயிரை இழக்கிறார் என்கிறது அப்பத்திரிக்கை.

மிருகத்தனமான இம்முறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுவதின் நோக்கம் தனக்கெதிரானவர்கள் சாகவும் வேண்டும் அதே நேரத்தில் அந்தச்சாவுக்கு தன்னை யாரும்பழிசுமத்தக் கூடாது என அரசாங்கம் விரும்புவதே காரணம் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

போராடும் பாரி மிட்டாய் தொழிலாளர் உதவி நிதி

ஆட்குறைப்பு,
லே-ஆப் ஆகிய
இரண்டையும் எதிர்த்து
கடந்த 4 மாத காலமாக
போராடிவரும்
நெல்லிக்குப்பம் பாரி
மிட்டாய்த்
தொழிலாளர்களுக்கு
சகோதர ஆதரவைத்
தெரிவிக்கும் பொருட்டு
இன்றே

நிதி அனுப்புவீர்!

நிதி அனுப்ப வேண்டிய முகவரி

சி. கோவிந்தராஜன்
1. ஸ்கூல் தெரு,
நெல்லிக்குப்பம்.

திருச்சி ரூ 10

திருச்சி பஞ்சாலை தொழிலாளர் சங்கம், நமன சமுத்திரம் கிளை சார்பில் ரூ 10 அனுப்பி வைக்கப்பட்டது.

திண்டுக்கல் ரூ 10

திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம் சார்பில் ரூ 10 அனுப்பி வைக்கப்பட்டது.

சதிகார உளவாளிகளை காப்பாற்ற முயற்சிக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி

வாஷிங்டன், நவ, 1—

உலக நாடுகளிளெல்லாம் சதிகாரக் கூட்டங்களாக நடமாடி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் உளவுஸ்தாபனமான சி ஐ ஏ மீது நடத்தப் பட்டு வரும் விசாரணையை அமெரிக்க ஜனாதிபதி போர்டு முடக்கப் பார்க்கிறார்.

இதனை அமெரிக்க செனட்டர் பிராங்க் சர்ச் அக். 28ல் நிருபர்களிடம் கூறியுள்ளார்,

எனினும் உள்நாட்டிலேயே சிஐஏ மேற்கொண்ட உளவு வேலைகள் பற்றியும் சதிகள் பற்றியும், பொது மக்களிடம் விசாரணை செய்வதை அக்கமிட்டி தொடர்ந்து செய்யும் என்றும் சிஐஏ மேற்கொண்ட கொலைகார சதிகள் பற்றி அறிக்கையொன்றை வெளியிடும் என்றும், சிஐஏயின் நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்யும் செனட் கமிட்டியின் சேர்மன் இடாஹோ டெமாகிரட் என்பவர் அறிவித்துள்ளார்,

இவ்விரண்டு நடவடிக்கைகளையும் போர்டின் நிர்வாகம் கடுமையாக ஆட்சேபித்துள்ளது என்றும் அவர் கூறினர்.

மேலும், சி ஐ ஏ பற்றிய விசாரணையை தடுப்பதற்கு பல முறைகளில் நிர்[illegible]பந்தம் கொடுக்கப்படுவது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பொதுமக்களிடம்விசாரணை செய்வதை போர்டு நிர்வாகம் கடுமையாக எதிர்க்கிறது என்றும் செனட்டர் பிராங் சர்ச் நிருபர்களிடம் கூறினர்.

மேலும், சி ஐ ஏ யின் கொலைச்சதிகள் பற்றிய அறிக்கையை வெளியி[illegible] வேண்டாம் எனவற்[illegible] அமெரிக்க ஜனாதிபதி [illegible]டின் பிரதம ஆலோசகர் பிலிப் பச்சென் என்பவரே செனட் விசாரணைக் கமிட்டிக்கு கடிதம் எழுதியுள்ளார் என பிராங் சர்ச் சுட்டிக்காட்டினர்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அந்தரங்கசதிகாரர்களாகவும், அமெரிக்காவின் அந்தரங்கமான 2 வது அரசாங்கமாகவும் செயல்பட்டு வரும் சி ஐ ஏ உளவு ஸ்தாபனம்பற்றிய அறிக்கை இந்தமாத வாக்கில் செனட் கமிட்டியால் வெளியிடப் படும் எனத் தெரிகிறது. எப்படி அன்னியநாட்டு தலைவர்களை கொலைபுரிய சி[illegible] ஏ சதிசெய்தது என்ப[illegible] வெளியாகும் முத[illegible] வேஜூவும் இதுத[illegible]

தீக்கதிர்

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

ஐக்கிய நாட்டு சபையின் அரசியல் கமிட்டி கொரியா தகராறை இரண்டு வாரங்கள் விவாதித்து இறுதியில் 29—10—75 அன்று ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றி ஐ நா பேரவையின் முடிவுக்கு பிரச்சினையை அனுப்பி வைத்துள்ளது.

தென்கொரியாவில் ஐ நா சபையின் கொடியுடன் அமெரிக்கப் துருப்புகள் இருப்பதும், 1953இன் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலமும்தான் விவாதத்தில் வந்த முக்கியப் பிரச்சினைகள்.

அமெரிக்கா முன்வைத்த தீர்மானம், போர் நிறுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தஅமெரிக்கா சீனு, வடகொரியா, தென்கொரியா, ஆகிய நாடுகள் கூடிய சீக்கிரம் சந்தித்துப்பேசி கொரியாவில் ஐ நா சபையின் தலையீடு முடித்துக் கொள்ளப்படுவதற்கும், அதே சமயத்தில் போர் நிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளை மேலும் நீடிப்பதற்கும்உடன்பாடு காண வேண்டுமென்று கூறியது, அமெரிக்கப் பிரதிநிதி பேசுகையில் தென்கொரியாவில் 42000 அமெரிக்கத் துருப்புகள் இருப்பது ஐ நா சபையின் சார்பாக அல்ல என்று திட்டவட்டமாகக் கூறி பிரச்சினையின் அடிப்படையையே தகர்த்தார். அது தென்கொரிய சர்க்காருக்கும், அமெரிக்க சர்க்காருக்கும் இடையே உள்ள ஒரு ஏற்பாடுதான் என்ருர். எனவே அமெரிக்கத் துருப்புகள் தென்கொரியாவிலிருந்து வாபசாகவேண்டும் என்பதை அமெரிக்க தீர்மானம் அறவே ஏற்றுக் கொள்ளவில்லை, கொரியாவில் அமெரிக்கா நீடித்து துருப்புகளை வைத்து தலையிடுவதற்கு ஐ நா சபையின் ஒப்புதலைக் கேட்டது அமெரிக்க தீர்மானம்.

அமெரிக்க தீர்மானத்திற்கு ஆதரவாக 59 வோட்டுகளும், எதிர்ப்பாக51வோட்டுகளும் பதிவாயின. வாக்கெடுப்பில் பங்கெடுக்க விரும்பாதவர்கள் 29.

இரண்டாவது தீர்மானத்தை சோவியத் யூனியன், சீனக்குடியரசு. அல்ஜீரியா முதலிய 43 நாடுகள் பிரேரேபித்தன. ஐ. நா. சபையின் கொடியோடு தென்கொரியவிலுள்ள 42000 அமெரிக்கத் துருப்புகளும்வாபசாக வேண்டுமென்றும். போர்நிறுத்த ஒப்பந்தத்தில் பிரதான பாத்திரம் பெற்றவர்கள் என்ற வகையில் உள்ள வட கொரியாவும் அமெரிக்காவும் 36 வருட கொரிய ராணுவ போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பதிலாக உடனே - நாட்டின் பரிபூரண ஒற்றுமை ஏற்படும் வரையில் —ஒரு சமாதான உடன்படிக்கைக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் அவ்விருநாடுகளையும் கேட்டுக்கொண்டது.

இத்தீர்மானத்திற்காதரவாக 51 வோட்டுகளும் எதிர்ப்பாக 38 வோட்டுகளும்பதிவாயின வாக்குப்பதிவில் கலந்து கொள்ளவிரும்பாதவர்கள் 50

ஐ நா பேரவையிலும் கிட்டத்தட்ட இதேமாதிரி தான் பிரச்சினை தீர்வின்றிஸ்தம்பிப்பில்தான்நிற்கு மெனக் கருதலாம்.

ஆனுல்-இந்தியாவின் பிரதிநிதி இந்த இரண்டு தீர்மானங்களிலும வாக்குப்பதிவில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிநின்றதென்பது நமது விசேஷகவனத்திற்குரிய விஷயம்.

அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுக்கு இடைவிடாது விருப்பம் தெரிவித்துக்கொண்டு, அமெரிக்க மூலதனத்தை இந்தியாவிற்குள் நுழையும்படி அழைத்துக் கொண்டு, அமெரிக்க மூலதனத்துடன் உள்நாட்டு மூலதனமும் கூட்டுச் சேர்ந்து இந்த நாட்டில் மட்டுமின்றி இதர பல நாடுகளிலும் சென்று அங்குள்ள மக்களைச் சுரண்டலாமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கும்இந்திய அரசு, எப்படி அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து வோட்டளிக்க முடியும்? டியேகோ கார்சியாவைப்பற்றியோ, கடல் வழியில் நாட்டுக்கு ஆபத்துமுள்ளது என்றோ, அவ்வப்போது ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேசுவது ஒரு விஷயம். ஆனுல் நடைமுறையில் உலக மகாசபையில் கொரியாவிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் வாபசாக வேண்டுமென்று ஒரு உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையை எடுப்பது முற்றிலும் வேறு விஷயமல்லவா?

இதே மாதிரி—தென் கொரியா முதலாளிகளை இங்கே அழைத்து, இந்நாட்டு முதலாளிகளை தென் கொரியாவுக்கு அனுப்பி, இருசாராரும் பரஸ்பர வர்த்தகத்திற்கும் கூட்டுக் கம்பெனிகள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்து விட்டு, நமது அன்றைய வெளிநாட்டு அமைச்சராயிருந்த திரு. சுவரண்சிங் கொரியாவுக்குச் சென றும், தென் கொரிய அமைச்சர்கள் இந்தியாவுக்குச் விஜயம் செய்தும், பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்பாடுகளை நிறுவிக்கொண்டு, நமதுஅரசு தென்கொரியா ஜனநாயகத்தையும் பாராட்டிய பிறகு அமெரிக்கத் துருப்புகளை வாபஸ் பெறச் சொன்னுல் தென் கொரியாவோடு சம்பந்தப்பட்ட நமது நாட்டு பெரு முதலாளிகளின் வியாபாரம் என்னுவது?

அமெரிக்காவை எதிர்க்க முடியாததோடு அமெரிக்காவை இவ்விஷயத்தில் ஆதரித்தால் மூன்ருவது உலக நாடுகள், சோசலிஸ்ட் நாடுகளின் உறவு பாதிக்கப்படும். மூன்ருவது உலக நாடுகளை அணுக இப்போது விடாது மந்திரிகள் அங்கெல்லாம் சுற்றி வருகிருர்களே. அந்த வியாபாரமும் முக்கியமானதாயிற்றே நம்நாட்டுப் பெரு முதலாளிகளுக்கு. எனவேதான் வாக்கெடுப்பில் பங்கெடுக்காத ஒரு நிலை.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று எ[illegible] நாளைக்கு இருக்கமுடியும்? அதுவும் நாம் ஒரு சிறு ந[illegible]. ஏகாதிபத்திய எதிர்ப்பில் விடுதலையைப் பெற்ற ஒ[illegible]டு. ஐ நா அரசியல் கமிட்டியின் முன் வந்த இரண்[illegible]வது தீர்மானத்தை இநதியாகட்டாயம் ஆதரித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஐ நா பேரவை முன் பிரச்சினை வரும்போதாவது இந்தத் தவறு திருத்திக் கொள்ளப்படவேண்டும்.

இந்திய பிரதமரை மேற்கோள்காட்டி

பாகிஸ்தான் பிரதமர் பேச்சு

புதுடெல்லி, அக். 31—[illegible]தான் இப்போது எது செய்தாலும் அது தன்னுடைய மத்திய அரசை பலப்ப[illegible]ந்துவதற்கே என்று [illegible]ஸ்தான் பிரதமர் கூறினுர், அவர் [illegible]யநோக்கத்திற்கு [illegible] இந்திய[illegible] [illegible]படிக்கை[illegible] [illegible]ட்டிஞர் [illegible]

பாகிஸ்தான் செய்தி ஒலிபரப்பில்பேசிய புட்டோ மேற்கண்டவாறு கூறினுர்.

மேலும், அப்துல்வாலிகான் தலைமையிலானதேசிய அவாமி கட்சியை தடை செய்யுமாறு பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்[illegible]

கேரள ஆளும் காங்கிரசில் லடாய்

ஏ. கே. அந்தோணி நிலைமையை மழுப்புகிருர்

கொச்சி, அக், 31—

கேரள ஆளும்கூட்டணிக்குள் தெளிவான ஒரு கருத்தை உருவாக்குவதற்கு முன்னர், ஆளும் கூட்டணியை விரிவுபடுத்துவது சம்பந்தமாகத் தனியாக நான் எந்த கருத்தையும் சொல்வது சரியல்ல என்று காங்கிரஸ் கட்சியின் மாநிலச் செயலாளர் ஏ கே அந்தோணி கூறினுர்.

டெல்லிக்குச் சென்றுவிட்டு அண்மையில் கொச்சிக்குத் திரும்பி அவரை நிருபர்கள் பேட்டி கண்டபோது அவர் அவ்வாறு கூறினுர்.

கேரள ஆளும்கூட்டணியை விரிவுபடுத்தப்படும் என்ற ரீதியில் சில அமைச்சர்கள் விடுத்துள்ள அறிக்கைகள் குறித்து நிருபர்கள் அந்தோணியின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது. அது குறித்துதமக்கு ஒன்றும் தெரியாது என்று கூறினுர்' ஆளும் காங்கிரசில் கேரளா காங்கிரஸ்சேருவதாகத் தமக்கு புதிதாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினுர். பழைய தகவல்என்ன? —என்று நிருபர்கள் கேட்ட போது அந்தோணி பதில் எதுவும் சொல்லவில்லை.

''கேரளத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் சிலபிரச்னைகள் உண்டு. நவம்பர் 2-ம் தேதியன்று கூடுகின்ற மகாசபைக்கூட்டம் — உருவாகியுள்ளபிரச்னைகளுக்குத்தீர்வு காண்பதற்கு பயனுள்ளநடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பது என் கருத்து. பிரச்னைகள் எத்தகையது என்பது பற்றி மகாசபை கூடுவதற்கு முன் சொல்ல நான்விரும்பவில்லை'' என்று காங்கிரஸ் தலைவர் அந்தோணி கூறினுர்.

நிருபர்கள் கேள்வி;—

ஐ என் டி யூ சி சங்கம் அமைத்துள்ள கிராமப்புற விவசாயத் தொழிலாளர் சங்கத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று மாநில காங்கிரஸ் கட்சியின்காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை மகாசபை ஏற்றுக் கொள்ளுமென்று எண்ணுகிறீர்களா?

அந்தோணி பதில்;

மகாசபைகூடட்டும்அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

டெல்லியில் நடந்த விவாதத்தின் வெளிச்சத்தில் நவம்பர் 2-ம் தேதி கேரள ஆளும் காங்கிரஸின் மகாசபை கூடும், அந்தக் கூட்டத்தில் விசேட பிரதிநிதியாக கலந்து கொள்ள டெல்லியிலிருந்து யாராவது ஒரு தலைவரை அனுப்பி வைக்க வேண்டுமென தாம்இந்திரா காந்தியிடம் கேட்டுக்கொண்டதாக அந்தோணி கூறினுர். டெல்லியில் பிரதம மந்திரி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே. சி. பந்த். ஓம் மேத்தா ஆகியோரைச் சந்தித்து விவாதம் நடத்தியதாகவும் அந்தோணி கூறினுர்.

கேள்வி:—

நீங்களும், கேரள போலீஸ் அமைச்சர் கருணுகரனும் மத்திய காங்கிரஸ் தலைமை அழைத்ததின் பேரில் தான் டெல்லி சென்றீர்களா?

பதில்:—

என்னை மத்திய அமைச்சர் ஓம்மேத்தா அழைத்திருந்தார். யார் அழைத்ததின் பேரில் கருணுகரன் சென்ருர் என்று கருணுகரனிடம் தான் கேட்க வேண்டும்.

(2-ம் பத்தி தொடர்ச்சி)

யத்துவம் வாய்ந்ததாம்.

இத்தீர்ப்புதன்னுடைய அரசாங்கத்தின் தீர்ப்பு இல்லை. நாட்டின் அதி உயர்ந்தகோர்ட்டின் தீர்ப்பு என்கிருர் புட்டோ. மேலும், இத்தீர்ப்பை அடிப்படையாக வைத்து தேசிய அவாமி கட்சி சம்பந்தமாக முடிவுகள் எடுக்கப் போகிருராம்.

எதிர்க்கட்சியினரை தான் சந்தித்துப் பேசப் போவதாகவும்பேச்சுவார்த்தைக்கு கதவு திறந்திருப்பதாகவும் கூறிய புட்டோ "இதன் அர்த்தம், தேசியஅவாமி கட்சிதலைவர்களை விடுதலைசெய்யப்போகிறேன் என்று அர்த்தம் அல்ல. சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்புக்கு மாருகச் செல்ல மாட்டேன்'' என்ருர்.

மேலும் இந்தியா பற்றி பாகிஸ்தான் கொண்டுள்ள அன்னியநாட்டுக் கொள்கை தற்போது யதார்த்த பூர்வமானது என்றும் மேலும் தன்னுடைய அன்னியநாட்டுக் கொள்கை பக்கத்து நாடுகளுடன் நட்புறவு என்ற அடிப்படையில் அமைந்தது என்றும் கூறினுர்.

பாகிஸ்தான் ரேடியோவில் 110 நிமிட நேரம் பேசிய பிரதமர் புட்டோ, தனதுபேச்சின்போது தனது வாதங்களுக்கு ஆதரவாக பல தடவை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியை மேற்கோள்காட்டிப் பேசினுர்.

திரைப்படத் தொழில் கமிட்டி

ஊழியர் தலைவர்கள் வரவேற்பு

உடனடி அமைக்க கோரிக்கை

சென்னை, அக். 30—

திரைப்படத்தொழிலில் உள்ளபிரச்னை குறித்துஆராய ஒரு குழுவை அரசு விரைவில் நியமிக்கும் என்று தமிழக முதலமைச்சர் திரு கருணுநிதி சட்டமன்றத்தில் அறிவித்துள்ளதை தென்னிந்திய திரைப்படஊழியர்கள் சம்மேளனம் வரவேற்றுள்ளது.

இவ்வாறு குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று இச்சம்மேளனம் தொடர்ந்து வற்புறுத்தியுள்ளது. இதுசம்பந்தமாக சம்மேளனத்தின் தலைவர் திரு ஆர். ரெங்கராஜனும், பொதுச் செயலாளர் திரு எம் பி சீனிவாசனும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

திரைப்படத் தொழில் ஊழியர்களின் வேலை மதிப்பீடு, நியாயமான சம்பள நிர்ணயிப்பு ஆகிய பிரச்னைகள் பற்றி ஆய்வு நடத்தவும் அனைத்து பிரிவு திரைப்படத் தொழிலாளர்களுக்கு அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை சிபாரிசு செய்யவும் தமிழக முதலமைச்சர் கூறிய கமிட்டிக்கு அதிகாரமளிக்க வேண்டும். இதனை தமிழக முதமைச்சர் உறுதிப்படுத்த வேண்டுமென தென்னிந்திய திரைப்பட ஊழியர் சம்மேளனம் விரும்புகிறது. சென்னையில் தான் மிகப்பெரும் பகுதியான திரைப்பட ஊழியர்கள்உள்ளனர். அவர்களுக்கு எவ்வித வேலைப்பாதுகாப்பும் அளிக்கவில்லை. இந்த அடிப்படையில் பார்த்தால் முதலமைச்சர் கூறியுள்ள கமிட்டிக்கு மேலே கூறப்பட்ட அதிகாரங்கள்கொடுக்கப்படுவது நியாயமாகும்.

மேலும், அக்கமிட்டியானது, திரைப்பட முதலாளிகளுக்கும் திரைப்பட ஊழியர்களுக்கும் சம பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைக்கப்படும் எனதிரைப்பட ஊழியர் சம்மேளனம் கருதுகிறது. மேலும், திரைப்படத் தொழிலில் உள்ள பல்வேறு பிரிவு தொழிலாளர்களின் சங்கங்கள் தென்னிந்தியத் திரைப்பட ஊழியர் சம்மேளனத்தில்இணைந்துள்ளன, எனவே அச்சங்கங்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் அக்கமிட்டியில் கொடுக்கப்படும் என்று சம்மேளனம் கருதுகிறது.

முதலமைச்சர் கூறிய கமிட்டியானது விரைவில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட ஆரம்பிக்கும் என ஆயிரக்கணக்கான திரைப்பட ஊழியர்கள் சார்பாக, தென்னிந்திய திரைப்பட ஊழியர்சம்மேளனம் தனது நம்பிக்கையை தெரிவிக்கிறது. கமிட்டியின் வெற்றிகரமான வேலைகளுக்கு திரைப்பட ஊழியர்கள் குறிப்பாக பல்வேறு திரைப்பட தொழில்நுணுக்க அனுபவமுள்ள ஊழியர்கள் தங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்கதயாராக இருக்கிருர்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனநாயக பாதுகாப்பு கூட்டங்கள்

தக்கலை, அக். 30—

குமரி மாவட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜனநாயகப் பாதுகாப்புப் பொதுக் கூட்டங்கள் நடந்தன.

புத்தன் சந்தை

இங்கு கடந்த 12-ந் தேதியன்று தோழர் பிரான்சிஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில், மாவட்டச் செயலாளர் பி. திவாகரன், தாலுகா செயலாளர் ஏ. எஸ் கிருஷ்ணன்குட்டி, பி. கோபால கிருஷ்ணன், ஜே ஆப்ரகாம் ஆகிய தோழர்கள் பேசினர்.

மஞ்சாலுமூடு

இங்குகடந்த 19-ந்தேதி நடந்த கூட்டத்தில் தோழர்கள் பொன்மலை வி பரமேஸ்வரன், ஏ எஸ் கிருஷ்ணன் குட்டி, ஊராட்சித் தலைவர் பி நடராஜன் பேசினர்.

கடயல்

இங்கு 20-ந்தேதி தோழர் கே புஷ்பாகரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பொன்மலை பரமேஸ்வரன், பேரூராட்சித்தலைவர் வி முத்துச்சாமி ஆகிய தோழர்கள் பேசினர்.

மேட்டூர் அணை

கருமலைக் கூடலில் 24ந் தேதியன்று தோழர் சி. முருகேசன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதேசக் கமிட்டிச் செயலாளர் எம் ராஜகோபாலன். எம் சீரங்கன், திருப்பூர் கே எஸ் கருப்புசாமி ஆகிய தோழர்கள் பேசினர்.

மத்திய அரசுக்கு வேண்டுகோள்

இக்கூட்டங்களில் அவசர நிலைப் பிரகடனத்தையும் போனஸ் குறைப்பு அவசரச் சட்டத்தையும் வாபஸ் பெறக்கோரியும், 'மிசா' போன்ற சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் உள்ள அரசியல்தலைவர்களையும் ஊழியர்களையும் உடனே விடுதலை செய்யக் கோரியும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தமிழகத்தில் ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்திரவுகளை வாபஸ் பெறக்கோரி மாநில அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டது.

அரிசி வழங்குக !

மார்க்சிஸ்ட், தி. மு. க. ஸ்தா. காங்கிரஸ் கூட்டு கையெழுத்து இயக்கம்

மதுரை, அக். 30—

மதுரைக்கு அருகில் உள்ள சிந்தாமணி—சின்ன அனுப்பானடி கிராமத்துக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் அரிசி விநியோகம் செய்யும் படி வற்புறுத்தி மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் கையெழுத்து மகஜர்கள் கடந்த 27-ந்தேதி கொடுக்கப்பட்டது.

மார்க்சிஸ்ட், தி.மு.க. ஸ்தாபனக்காங்கிரஸ், ஆகிய கட்சிகள் இந்தகையெழுத்து இயக்கத்தில் பங்கு கொண்டன. அதிமுகவை அழைத்தும் இதில் பங்கெடுக்க மறுத்துவிட்டது.

கூட்டுறவு சங்கம் மூலம் தற்போது சீனியும் கோதுமையும் மட்டும்தான் வினியோகம் செய்யப்படுகிறது. அரிசி சப்ளை இல்லை.

வேலியே பயிரை மேய்கிறது

விசாரணை என்று அழைத்துச் சென்று பெண்ணைக் கெடுத்த கோரம்

திருநெல்வேலி, நவ 1—

பாளையங்கோட்டையில் போலீசார் இருவர் இளம் பெண் ஒருவரை விசாரணைக்கு என்று அழைத்துச் சென்று மானபங்கம்செய்த கொடுமை நடந்துள்ளதாக சொல்லப்படுவதாவது;-

பாளையங்கோட்டை பஸ் நிலையத்தில் குறிச்சியைச் சேர்ந்த சண்முகத்தாய் என்ற பெண்ணும் அவரது உறவினர் ஒருவரும் பஸ்சுக்காக நின்று கொண்டிருந்தார்களாம். அப்போது அங்கிருந்த ஆயுத போலீஸ் படையைச் சேர்ந்த ஒருவரும், மற்றொருவரும் சண்முகத்தாயையும், அவரது உறவினரையும் பார்த்து சந்தேகப்பட்டு காவல்நிலையத்துக்கு அழைத்தார்களாம். தன்னுேடு வந்திருப்பவர் தனது மாமா என்றும் உறவினர் வீட்டுக்குப்போவதற்காக வந்திருக்கிருேம் என்றும் சண்முகத்தாய் கூறினுராம்.

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல் அப்பெண்ணுேடு வந்த உறவினரைத் தனிமைப் படுத்தி சண்முகத்தாயை மட்டும் பக்கத்திலுள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்[illegible]று அங்கு வைத்து மூன்று போலீசாரும் மற்றும் இருவரும் ஈவிரக்கமின்றி கொடூரமாக மானபங்கப் படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

மேற்குறித்த சம்பவம் பற்றி பாளையங்கோட்டை போலீசில் கொடுத்த புகாரின் பேரில் ஆயுதப் போலீஸ்படையைச்சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். மேலும் மூவர் போலீசாரால் தேடப்பட்டு வருகின்றனர். இதுதொடர்பான வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

லட்சம் மாதர்கள் கையெழுத்துஇயக்கம்

தீவிரமாகசெயல்படுக

நவம்பர் 10-ந் தேதி முடிய கையெழுத்து இயக்கத்தின் தேதி நீட்டியிருப்பதை அறிவீர்கள். கிடைத்த அவகாசத்தைப்பயன்படுத்தி கொடுத்தகோட்டாவைஇரட்டிப்பாக்கும் உறுதியுடன் போட்டி போட்டுக்கொண்டு செயலாற்றக் கோருகிறேன்.

தமிழக முதல்வரிடம் நவம்பர் மத்தியில் சென்னையில் சந்தித்து அளிக்க இருக்கும் இந்த மனுவில் லட்சம் மாதர்களிடம் கையெழுத்து வாங்குவது என்ற நமது முடிவை வெற்றிகரமாக்க முழு முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள். முயற்சி செய்தால் முடியாத காரியமென்பது எதுவும் நமது அகராதியில் இல்லை. துவக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் இயக்கங்கள் பல நடத்தி முன்னேற்ற பாதையிலே வீர நடை போடும் நமது தமிழக ஜனநாயக மாதர் சங்கத்தின் அறைகூவலை ஏற்று நமது மாதர் இயக்கஊழியர்கள் இல்லங்கள்தோறும்சென்று கையெழுத்துப்பெற்றிடுவீர். 13ந்தேதிக்குள் கையெழுத்து மகஜர்களை முறைப்படுத்தி எனக்கு அனுப்பக்கோருகிரேன்.

வாழ்த்துக்களுடன் தோழமையுள்ள

பாப்பா உமாநாத்

த. நா. வி. சங்க முடிவின்படி தஞ்சை மாவட்டத்தில்

கையெழுத்துஇயக்கம்

தஞ்சாவூர், நவ. 1—

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் செயற்குழு கடந்த 17—10—75 ந்தேதி கூடி எடுத்த முடிவுகளின் அடிப்படையில் பிரதான உடனடிக் கோரிக்கைகளை கார்டுகளில் அச்சடித்து கையெழுத்துவாங்கி தமிழக முதல்வருக்குஅனுப்பும் இயக்கத்தை தஞ்சை மாவட்ட விவசாயிகள்சங்கம் துவங்கி மாவட்டமெங்கும் நடத்தி வருகிறது,

கார்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு;

குத்தகை, வார சாகுபடி தாரர்களுக்கு 75 சதவீதம் வாரம் கிடைக்க அரசு சட்டம் பிறப்பிக்க வேண்டும்.

1384-ம் பசலியில் ஏற்பட்டவறட்சியால்பாதிக்கப்பட்டு சீரழிந்து கொண்டிருக்கும் விவசாயிகளை காபந்து செய்யக்கூடிய முறையில் கடன்கள் பூராவையும் [குத்தகை பாக்கியால் ஏற்பட்ட கடன்கள், புரோநோட்டுக் கடன்கள், கூட்டுறவு கடன்கள், அரசுக்கடன்கள், வட்டிக்கடை கடன்கள், ஒத்தி வைப்புக்கடன்கள்] இரண்டு ஆண்டுகளுக்குஒத்திவைத்து அரசு அவசர சட்டம் பிறப்பிக்க வேண்டும்.

ரெவின்யூ கோர்ட்டை உடனடியாக மூட வேண்டும்.

பத்து ஏக்கருக்கு மேல்நிலமுள்ளவர்களிடம் உபரி தானியம்பூராவையும்,அரசு நிர்ணய விலைக்கு கட்டாயமாக கொள்முதல் செய்ய வேண்டும்.

கிராமங்களில் 500 நபர்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை திறந்து அரிசி, இதர அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கவேண்டும்,

காங்கிரஸ் காரர்களின்

தாக்குதல் 4 பேருக்குக் கடுமையான காயம்

பாலக்காடு, அக். 31—

கேரளத்தில் கொல்லங்கோடு என்னும் ஊரில் களத்தில் வைக்கோல் வேலை செய்து கொண்டிருந்த விவசாயத் தொழிலாளர்களை இளைஞர் காங்கிரஸ் காரர்கள் ஆயுதங்களைக் கொண்டு தாக்கினராம். இதனுல் 4 பேர் கடுமையானகாயமடைந்தனர், இவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்,

இந்தக்கொடிய சம்பவம் கடந்த 28-ம் தேதியன்று நடந்தது.

கடந்த மூன்று—நான்கு மாதங்களுக்கிடையேஆளும் காங்கிரஸ் தலைமையில் உள்ள இவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியின் ஊழியர்களுக்கு எதிராக ஒன்றுக்குப்பின் ஒன்ருகத் தாக்குதல் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

இவர்கள் வீசுவாள் உள்ளிட்ட பலபயங்கர ஆயுதங்களைத்தாக்குதலுக்குப்பயன்படுத்துகின்றனர்.

காயமடைந்தவர்களில் ஆறுசாமி என்பவரின் நிலை மிகவும்மோசமாகியுள்ளது. காயமடைந்த நால்வரில் இருவர்பாலக்காடுமாவட்ட மருத்துவமனையிலும் மற்ற இருவர் கொல்லங்கோடு மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

வருந்துகிருேம்

மதுரை நகர் 35—35வது வட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தோழர் கோபாலாச்சாரியின் தந்தை திரு காசிவியா கிருஷ்ணமாச்சாரி கடந்த 19—10—75.ல் காலமானுர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம் அவருக்கு வயது 77. கட்சியின் மதுரைக்கமிட்டி உறுப்பினர்களும் தோழர்களும் வந்திருந்து அனுதாபமும் அஞ்சலியும் செலுத்தினர்.

குமரி மாவட்டத்தில்

மதுரை குமார் இசைக் குழு நிகழ்ச்சிகள்

தக்கலை, நவ. 1—

குமரி மாவட்டத்தில், மதுரை குமார் குழுவினர் 6, 8, 9, தேதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசியல் கலைநிகழ்ச்சி நடத்துகிருர்கள்.

நவ. 6ந்தேதி தலக்குளம் சந்திப்பிலும், 8 ந் தேதி கருங்கல் சந்தைதிடலிலும். 9- ந் தேதி பரசேரி சந்திப்பில் விவசாயிகள் சங்கக் கட்டிடத்திறப்பு விழாவிலும் இசை நிகழ்ச்சி நடக்கிறது. இந்த நிகழ்ச்சிகளில், தோழர்கள் திண்டுக்கல் என். வரதராஜன், பி.திவாகரன், ஜி. எஸ் மணி, என். அச்சுதன், ஏ நடராஜன், ஜனுர்த்தனன், நாராயண பிள்ளை, மணி, சுந்தர், வழக்கறிஞர் ஜான்சன், பி. நடராஜன் ஆகியோரும் பேசுவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலக்குழுசார்பில், 'தீக்கதிர்' அச்சகத்தில் (6-16 பைபாஸ் ரோடு மதுரை 625018) அச்சிட்டுவெளியிடுபவர் ஆசிரியர் கே. முத்தையா.